2014 ஆகஸ்ட் 6]

354—

வரி விலக்கு

4206*—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கட்டுநூலுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு வழங்கப்பட்டதுபோல் கோன் நூலுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கைத்தறி கட்டுநூலுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டதுபோல கோன் நூலுக்கும் வரி விலக்குசெய்ய அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் கோரியுள்ளார்கள். விசைத்தறி நெசவாளர்கள் பயன்படுத்தும் கோன் நூல் விற்பனைக்கு விதிக்கப்பட்டு வரும் 5 சதவீதம் மதிப்புக் கூட்டு வரிக்கு விலக்களிக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறையிலே நெசவு செய்யப்படுகின்ற ஏராளமான இரகங்கள் விசைத் தறியிலே நெசவு செய்யப்படுகின்றன. அப்படி விசைத்தறியிலே நெசவு செய்யப்படும்போது விசைத்தறிக்குப் பயன்படுத்தக்கூடிய நூலுக்கும்*

சேர்த்து வரி விதிக்கப்படுகிறது. எனவே, ஒட்டுமொத்தமாக விசைத்தறிக்குப் பயன்படுத்தக்கூடிய கோன் நூலுக்கு வரியை விலக்கினால் கண்டிப்பாக அது கைத்தறி நெசவுத்தொழில் செய்பவர்களுக்குப் பயன்படுவதற்கான வாய்ப்பு அதிக அளவில் இருக்கின்றது. எனவே, இதனை அரசு மறுபரிசீலனை செய்து வரிவிலக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்காகத் தேவைப்படுகின்ற hank yarn என்று சொல்லக்கூடிய சிட்டா நூல் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும், அவர்கள் எந்த வகையிலும் பாதிக்கக்கூடாது என்பதற்காக வரி விலக்கு அளிக்கப்பட்டது. விசைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி வைத்திருக்கக்கூடியவர்கள் பொருளாதாரரீதியாக வசதிமிக்கவர்களாக இருக்கிறார்கள். இந்த மதிப்புக் கூட்டு வரியினை அவர்களால் தாங்கமுடியும், செலுத்த முடியும் என்ற அளவில் விதிக்கப்படுகிறது. ஆக, கைத்தறி நெசவாளர்கள் நலிவடைந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்த வரி விலக்கு அளிக்கப்பட்டு இன்றுவரை அது தொடர்ச்சியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதுகுறித்து எந்த வகையில் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முடிவெடுப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 355, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*